www.Padasalai.Net

**பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

ந.க.எண். 01354/டபிள்யு3/இ3/2024 நாள் 10.07.24

பொருள் பள்ளிக்கல்வி – 2017-18, 2018-19, 2023-24 ஆகிய கல்வி ஆண்டுகளில் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் கணினி அறிவியல் பணியிடம் உருவாக்குதல் – கோரிக்கை – சார்ந்து.

பார்வை தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்க கோரிக்கை நாள் 08.07.24

........

பார்வையில் காணும் தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்க 08.07.24 நாளிட்ட கடிதத்தில் புதிதாக தரம் உயர்த்தப்பட்டுள்ள மேல்நிலைப்பள்ளிகளில் கணினி ஆசிரியர் பணியிடம் வழங்கக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

2017-18, 2018-19, 2023-24 ஆகிய கல்வி ஆண்டுகளில் உயர்நிலை பள்ளிகளில் இருந்து மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வரும் பள்ளிகளுக்கு கணினி ஆசிரியர் பணியிடம் உருவாக்கப்படவில்லை. ஆனால் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி கணினி அறிவியல் மற்றும் கணினி பயன்பாடுகள் பாடப்பிரிவு நடைபெற்று வருகிறது எனத் தெரிய வருகிறது. எனவே. மேற்கண்ட ஆண்டுகளில் தொடங்கப்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் கணினிப் பிரிவில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை சார்பான விவரங்களை இணைக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்ட அளவில் இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு jdhscose@tnschools.gov.in உடனடியாக அளிக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: School Upgradation List
Form – 1

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி
அலுவலர்கள்

www.Padasalai.Net

# FORM – 1

## COMPUTER SCIENCE GROUP STUDENTS STRENGTH

| S.No. | District Name | School Name | School UDISE Code | Eleventh Standard Strength | | Twelfth Standard Strength | | Total | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Boys | Girls | Boys | Girls | | |